

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2018 SEPTEMBER

மலர்: 11 இதழ்: 12 செப்டம்பர் 2018 விலை: ரூ. 10

## உயிருண்ணும் தாவரங்கள்!



## சைவமே அசைவமானால்?



- மரம் என்ற இறைவரம்!
- மரம் நடுதல் இறைவிசுவாசியின் கடமை
- இறைவன் கூறும் நல்லமரமும் கெட்டமரமும்
- மறுமையை நினைவூட்டும் மரங்கள்

# அதிசய ஆன்மீக உலக மாநாடு

வருடந்தோறும் துல்ஹஜ் (அரபு) மாதத்தில் உலகின் பல்வேறு பகுதியிலிருந்தும் இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் ஒன்று கூடும் மாநாடு இது!

- 'ஒன்றே குலம் ஒருவனே இறைவன்' என்றும் 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' என்றும் நாம் கவிதைகளில் கனவுகளில் கண்டிருப்போம்.

- அதன் செயல் வடிவ மாதிரி இதோ உங்கள் கண் முன்னால்!

இதோ ஒரே மைதானத்தில் உலகின் பல்வேறு இனங்கள், நிறங்கள், நாடுகள், மொழிகள், சங்கமிக்கும் காட்சி!

- "இறைவா ஆஜராகி விட்டோம், உன் சன்னதியில் ஆஜராகி விட்டோம்.."

(லப்பைக்.. லப்பைக்..) என்று முழங்கியவாறு இறைவனின் ஆலையத்தில் இலட்சக்கணக்கான முஸ்லிம்கள் ஒன்று கூடி ஹஜ் கடமையை நிறைவேற்றும் காட்சி!

- மக்கா நகரென்னும் புனித பூமியில் இறைத்தூதர் இப்ராஹீம் நபியின் பல்வேறு வழிமுறைகளை, இறைகட்டளைக்கேற்ப நிறைவேற்றி, இறைவனுக்கு அடிபணிந்தவர்களாக தோளோடு தோள் நின்று தொழும் காட்சி!

- உலக அதிசயங்கள் என்று மக்கள் எதை எதையோ கூறலாம்... ஆனால்

பலவேறு இனத்தவர், நிறத்தவர், நாட்டவர், மொழியினர், இலட்சக்கணக்கில் ஒன்று கூடுவது உலகையே வியக்க வைக்கும் அரிய அதிசயமல்லவா?

நன்றி: அறிஞர் ஜமாலுதீன் உமரி, உமராபாத்



அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

# THIRU QURAN NARCHEYDHI MALAR

மலர்: 11 இதழ்: 12 செபடம்பர் 2018 விலை: ரூ. 10

## பொருளடக்கம்

ஆளுவோருக்கும் ஆளத்துடிப்போருக்கும் எச்சரிக்கை -2
நம்மை ஆள்பவர்களை யார் ஆள்கிறார்கள்? -3
அற்பமானவைகள் எவ்வாறு இறைவனாகும்? -7
உலகின் கவர்ச்சியில் ஏமாறவேண்டாம் -6
அற்பமானவைகள் எவ்வாறு இறைவனாகும்? -7
எதிரிகள் ஏசினாலும் பொறுமை -9
ஜீவகாருண்யம் என்ற பெயரில் அராஜகம் -10
சைவமே அசைவமானால் எதை உண்பேன்?-12
வாசகர் எண்ணம் -14
மரம் என்ற இறைவரம்!-15
மரம் நடுதல் இறைவிசுவாசியின் கடமை -18
இறைவன் கூறும் நல்லமரமும் கெட்டமரமும் -20
உணவு என்ற அருட்கொடைக்கு நன்றி மறக்கலாமா? -22
மறுமையை நினைவூட்டும் இயற்க்கைக் காட்சிகள் -24

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை **9886001357** என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்ப வேண்டும்.
- ஓராண்டு சந்தா **Rs.120-**
- இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் தொடர்பு எண்: **08867971835**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

**www.quranmalar.blogspot.com**

# ஆளுவோருக்கும் ஆளத்துடிப்போருக்கும் எச்சரிக்கை

- பொதுமக்கள் காணும்படியாக மண்ணை முத்தமிடுவதும்,

- ஏதோ கவிஞர்கள் புனைந்த பாடல்களை உருவிடுவதும்,

- தேசத்தின் கொடியை பலர் காண வணங்குவதும்

- மேடைகளில் வீரவசனங்கள் பேசுவதும்

- கைதட்டல் பெறுவதும்

- பட்டாசு வெடிப்பதும்

- ஆளுயர மாலைகளை கழுத்தில் வாங்குவதும் எல்லாம்தான் நாட்டுப்பற்று என்று ஏமாற்றித் திரியும் இன்றைய ஆட்சியாளர்களும் நாளை ஆட்சியை அடையத் துடிக்கும் அரசியல்வாதிகளும் இந்த மக்களைப் பற்றி சிந்திக்கட்டும்.

- இன்று இவர்களின் உழைப்பைச் சுரண்டி நீங்கள் மாளிகைகள் கட்டி சுகித்துக் கொண்டு இருக்கக்கூடும்.

- தலைமுறைகளுக்காக பொது சொத்துக்களை சூறையாடி சேர்த்துக் கொண்டிருக்கக்கூடும்.

- இவர்களைச் சேரிகளில் தீண்டத்தகாதவர்கள் அல்லது அசிங்கமானவர்கள் என்று ஒதுக்கி வைத்திருக்கக் கூடும்.

-தெருவோரங்களில் இந்த பலவீனர்களை நீங்கள் கண்டும் காணாமல் உங்கள் மகிழுந்துகளில் கடந்து போகக்கூடும்.

ஆனால் இவர்கள் நீங்கள் ஆளும் நாட்டின் பிரஜைகள் என்பதை உணருங்கள். இவர்களைப் பற்றி இறைவனின் நீதி மன்றத்தில் விசாரிக்கப் படுவீர்கள். அங்கு நீங்கள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு உங்களுக்கெதிரான சாட்சிகளாக இவர்கள் நிற்பார்கள். இது நிச்சயம்!

இது வெற்று வாய்வார்த்தையல்ல என்று உணருங்கள். ஏனெனில் இதை சொன்னது இவ்வுலகைப் படைத்தவனின் தூதர்!இறைவனின் இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள் :

**"நினைவில் கொள்க! நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே. உங்களில் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்பிலுள்ளவை பற்றி (மறுமையில்) விசாரிக்கப்படுவீர்கள். ஆட்சித் தலைவர் மக்களின் பொறுப்பாளர் ஆவார். அவர் தம் குடிமக்கள் குறித்து விசாரிக்கப்படுவார்."** (நூல்: முஸ்லிம்)



# நம்மை ஆள்பவர்களை யார் ஆள்கிறார்கள்?

## தமிழகத்தின் மீது திணிக்கப்படும் போராட்டங்கள்

கோவை மேட்டுப்பாளையம் அருகில் 90 களில் நடந்த பவானி ஆற்றில் கலந்த விஸ்கோஸ் ஆலையின் கழிவுகளுக்கு எதிரான போராட்டம் தொடங்கி, தொடர்ந்து நடந்த கூடங்குளம் அணு உலைகளுக்கு எதிரான போராட்டம், மீத்தேன், ஹைட்ரோகார்பன், கெயில் எரிவாயு குழாய், நியூட்ரினோ திட்டம் எதிர்ப்பு போராட்டங்கள், ஜல்லிக்கட்டுத் தடைக்கு எதிரான போராட்டம், நீட் தேர்வுக்கு எதிரான போராட்டம், ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டம், விவசாய நிலங்களை பலவந்தமாக அழித்து எட்டுவழிச் சாலை அமைக்கத் துடிக்கும் சக்திகளுக்கு எதிரான போராட்டம்.. என தொடர்ச்சியாக போராட்டமே வாழ்க்கை என்ற நிலை தொடர்ந்து தமிழகத்தில் நீடிப்பதை நாம் கண்டும் அனுபவித்தும் வருகிறோம். சமீபத்தில் நூறு நாட்களுக்கு மேலாக ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் அரசால் மிகப்பெரிய வன்முறையை நிகழ்த்தப்பட்டு போராட்டத்தில் ஈடுபட்ட 13 பேர் சுட்டுக்கொல்லப் பட்டிருக்கிறார்கள். ‘பொதுமக்கள் எக்கேடோ கேட்டுப் போகட்டும், நமக்கு அவர்களின் உடமைகளும் சம்பாத்தியமுமே இலக்கு’ என்ற தீராத வெறியோடு இயங்கும் சுயநல சக்திகள் இவற்றின் பின்னால் இருப்பதை நாம் உணர முடியும்.

இவ்வாறு மக்களின் அமைதியைக் குலைத்து அவர்களை ஓயாமல் அலைகழித்து வருவோர் யார்?

இக்கேள்விக்கு பதிலாக நம் விரல்கள் நம்மை ஆண்டுவரும் முதலமைச்சர் அல்லது பிரதமர் ஆகியோரையும் அவர்களைச் சார்ந்த அரசியல் வாதிகளையுமே சுட்டிக்காட்டும். ஆனால் உண்மை அதுவல்ல. மாறாக உண்மையில் இங்கு இடம்பெற்றுள்ள படத்தில் காணும் பொம்மலாட்டத் தொடர்தான் இன்று நாட்டில் நடந்து கொண்டு இருக்கிறது என்பதை



சற்று அவதானிப்போர் உணரலாம். பல்வேறு மட்டங்களில் பல கைப்பாவைகள் மேல்மட்ட கைப்பாவைகளால் இயக்கப்படுகின்றன. நாம் யாருக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தி வருகிறோமோ அவர்கள் வெறும் கீழ்மட்டக் கைப்பாவைகள் மட்டுமே!

சமீபத்தில் நடந்த தூத்துக்குடி ஸ்டெர்லைட் துப்பாக்கி சூடு சம்பவத்திற்கும் உயிரிழப்புக்களுக்கும் காரணமானவர்கள் என்று காவல் துறையையும் மாவட்ட ஆட்சியரையும் முதலமைச்சரையும் பிரதமரையும் குற்றம் சாட்டுகிறோம். ஆனால் உண்மைக் குற்றவாளிகள் அவர்கள் அல்ல. இவர்களெல்லாம் கைப்பாவைகளே. அவர்களை யார் இயக்கி தங்கள் சுயநல வேட்கைகளைத் தீர்த்துக் கொள்கிறார்களோ அவர்கள்தான் உண்மைக் குற்றவாளிகள்! அவர்கள்தான் இந்த பொம்மலாட்டத் தொடரின் உச்சாணிக்கொம்பில் இருக்கிறார்கள்.

### இவர்கள் யார்?

- அமெரிக்கா மற்றும் வல்லரசு நாடுகள் கூட்டமைப்பு என்பார்கள் சிலர்
- இல்லுமினாட்டிகள் என்பார்கள் சிலர்.
- உலகத்தின் செல்வங்கள் யாரிடம் குவிகிறதோ அந்த ஒரு சதவீதம் செல்வந்தர்களின் கூட்டம் என்பார்கள் சிலர்.

அவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது சமீபத்தில் நடந்த ஸ்டெர்லைட் உதாரணம் மூலம் தெளிவடைந்து வருகின்றது. அவர்கள் முழுக்க முழுக்க சுயநலம் கொண்ட பண வெறியர்கள். மக்கள் எக்கேடோ கெட்டுவிட்டுப் போகட்டும். அவர்கள் அழிந்தொழிந்தாலும் சரி, நாடு நாசமானாலும் சரி, இயற்கை வளங்கள் அழிந்தாலும் சரி நமக்குத் தேவை பணம் என்று செல்வத்தை மேலும் மேலும் குவிப்பதில் கண்ணைமூடிக்கொண்டு அந்த கும்பல் வெறியோடு செயலாற்றி வருகிறது.

அக்கும்பல் எல்லா மட்டத்திலும் தங்கள் கைப்பாவைகளை முன்னிறுத்திக் கொண்டு மறைமுகமாக செயல்படுவதால் அவர்களைத் தெளிவாக அடையாளம் காண்பது கடினமான செயலாகவே உள்ளது. ஆனாலும் நாம் சந்திக்கும் அநீதிகளுக்கும் அக்கிரமங்களுக்கும் மூல காரணம் அவர்களே என்பது தெளிவு. அவர்களைத்தான் மக்களின் நலனுக்காகப் போராடுவோர் தடுத்து நிறுத்த முற்பட வேண்டும்.

### வலுவற்ற போராட்டங்கள் தீர்வல்ல!

பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் உரிமைகளை மீட்பதற்காக போராடும்போது அவர்கள் மீது தடியடி நடத்தும் போலீஸ்காரர்கள் மீது கல்லேறிவதாலோ அவர்களின் மேலதிகாரிகளை முற்றுகையிடுவதாலோ பிரச்சினைக்கு தீர்வு ஏற்படப்போவது கிடையாது. மாநில அல்லது மத்திய அரசைக் கைப்பற்றியுள்ள அரசியல் கட்சிகளையோ தலைவர்களையோ தேர்தல்களில் ஓட்டுபோட்டு அகற்றுவதாலும் பிரச்சினை தீரப்போவதில்லை. காரணம் உச்சாணிக்கொம்பில் இருக்கும் கொடியோர்கள் பயங்கரமான சதிவலையை நாடங்கும் உலகெங்கும் பின்னி உள்ளார்கள். தங்கள் கைப்பாவையாக செயல்படுபவர்களை மட்டுமே நாடாள அனுமதிக்கிறார்கள். மறுப்பவர்களை விலைக்கு

வாங்கவும் மிரட்டி அடிபணிய வைக்கவும் அல்லது தீர்த்துக் கட்டவும் வலிமையான தந்திரங்களும் வழிமுறைகளும் அவற்றை செயல்படுத்தத் தேவையான ஆதிக்கமும் இவர்கள் கைவசம் உள்ளன. ஊடகங்கள் மூலம் மக்களை மூளை சலவை செய்து இவர்களின் செயல்களை நியாயப்படுத்தவும் செய்கிறார்கள்.

### கார்ப்பரேட் ஆதிக்க சக்திகள்

தங்கள் சுயநலத்திற்காக நாட்டு வளங்களையும் இயற்கை வளங்களையும் தாங்கள் நியமித்த கைப்பாவைகளின் துணைகொண்டு கொள்ளையடிக்கும் இவர்கள் யார் என்பது மர்மமாக இருப்பதால் இவர்களை நாம் தற்போது ‘கார்ப்பரேட் ஆதிக்க சக்திகள்’ என்றே அழைப்போம்.

நம் நாட்டைப் பொறுத்தவரையில் ஆட்சியாளர்கள், உயர் அதிகாரிகள், காவல்துறை, மா∴பியாக்கள், நீதித்துறை, தேர்தல் கமிஷன், சிபிஐ, வருமானவரித்துறை, ஊடகங்கள், பணப்புழக்கம் என அனைத்தையுமே கையாகப்படுத்தி உள்ளன கார்பரேட் ஆதிக்க சக்திகள். இவ்வளவும் கைவசம் இருக்கும்போது தங்கள் சதித் திட்டங்களுக்கு ஒத்துழைக்காதவர்களை சரி கட்டுவதும் தீர்த்துக் கட்டுவதும் இவர்களுக்கு கடினமான காரியமா என்ன?

### எவ்வாறு அடைந்தார்கள் ஆதிக்கத்தை?

இதைப் புரிந்து கொள்ள நீங்கள் பணம் வந்த கதையை தெரிந்தாக வேண்டும்.

ஆரம்பத்தில் பண்ட மாற்று முறையில் நடந்து கொண்டிருந்த வியாபாரம் மெல்ல மெல்ல தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் மூலம் நடந்தது. அப்போது நாணயங்கள் திருட்டு அல்லது கொள்ளை போவதைத் தடுக்கும் முகமாக சில செல்வந்தர்கள் நாணயங்களின் பாதுகாப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று கூறி பாதுகாப்புப் பெட்டகங்களை நிறுவினார்கள். அவையே பிற்காலத்தில் வங்கிகளாக உருவெடுத்தன. வங்கியாளர்கள் தங்களிடம் பாதுகாப்புக்காக ஒப்படைக்கப்பட்ட தங்க நாணயங்களுக்கு பகரமாக வாக்குறுதிப் பத்திரங்களை கையொப்பமிட்டு - அதாவது ரசீதுகளை நாணயங்களின் உரிமையாளர்களுக்குக் கொடுத்தார்கள். தங்கள் சேவைக்கு கட்டணமும் வசூலித்தார்கள். நாள் செல்லச்செல்ல மக்கள் அந்த ரசீதுகளையே நாணயங்களுக்கு பதிலாக தங்களுக்குள் பரிமாறிக்கொண்டு வியாபாரம் செய்தார்கள். ரசீதுகளைக் கொண்டே காரியங்கள் நடைபெறுவதால் மக்களில் எவருக்கும் வங்கியில் இருந்து நாணயங்களைத் திரும்பப் பெறும் அவசியமே ஏற்படவில்லை.

### வங்கியாளர்களின் நம்பிக்கை துரோகம்:

இவ்வாறு நீண்ட காலமாக தங்களிடம் தங்க நாணயங்கள் உறங்கிக் கிடப்பதைக் கண்ட வங்கி உடைமைகள் தாங்கள் மக்களோடு செய்துகோண்ட ஒப்பந்தத்திற்கு மாற்றமாக அவற்றை மறைமுகமாக மற்றவர்களுக்கு கடனாகக் கொடுத்து வட்டியும் ஈட்ட ஆரம்பித்தார்கள். அவ்வாறு கடன் பெற்றவர்களும் தங்க நாணயங்களை வாங்கிச் செல்வதை விட வங்கியாளர்களின் ரசீதுகளையே விரும்பி வாங்கிச்

*சென்றார்கள். தொடர்ந்து தாங்கள் கையெழுத்திட்டு வழங்கும் ரசீதுகள் மக்களால் கேள்வி கேட்கப்படாமல் கைமாறப்படும் நிலையைக் கண்ட வங்கியாளர்களுக்கு அது அலாதியான தைரியத்தை கொடுத்தது. தங்கள் இச்சை போல விரும்பிய மதிப்புக்கு விரும்பிய எண்ணிக்கையில் அச்சடித்து அதை விநியோகித்தார்கள். அந்த ரசீதுகளின் பரிணாமமே இன்று உங்கள் கைகளில் புழங்கும் காகிதப் பணத்தாள்கள்!*

*வங்கி உடைமைகள் இவ்வாறு அச்சிட்டு நாட்டில் புழக்கத்தில் விட்ட பணத்திற்கு வட்டியும் வட்டிக்குமேல் வட்டியும் எல்லாம் வசூலித்தார்கள். மட்டுமல்ல, அவற்றைக் கொண்டு தாங்கள் விரும்புவதை வாங்கிக் குவித்தார்கள். சமூகத்தில் மற்றவர் அனைவரையும் அடிமையாக்கும் அந்தஸ்திற்கு உயர்ந்தார்கள். நாட்டை ஆள்வோரையும் அடிமைகளாக்கினார்கள். அல்லது தங்களின் கைக்கூலிகளைக் கொண்டு நாட்டை ஆண்டார்கள். ஆண்டுகொண்டு இருக்கிறார்கள்.*

*(தொடரும் இன்ஷாஅல்லாஹ்)*

# உலகின் கவர்ச்சியில ஏமாறவேண்டாம்

*இறைவிசுவாசிகள் தற்காலிகமான இவ்வுலக வாழ்க்கை ஒரு பரீட்சை போன்றது என்பதையும் இவ்வுலகம் அதற்கான பரீட்சைக் கூடம் போன்றது என்பதை உணர்ந்து அதற்கேற்ப நடந்து கொள்வார்கள். அவர்களின் இலக்கு மறுமையில் சொர்க்கத்தை அடைவதே!*


**● நன்கு அறிந்து கொள்ளுங்கள்: இந்த உலக வாழ்க்கை விளையாட்டும், கேளிக்கையும், வெளிப்பகட்டும் மற்றும் உங்களிடையே ஒருவருக்கொருவர் பெருமையடித்துக் கொள்ளுதல், செல்வங்கள், குழந்தைகள் ஆகியவற்றில் ஒருவரையொருவர் மிஞ்சிவிட முற்படுதலுமேயன்றி வேறில்லை. அதற்கான உவமை: மழை பொழிந்திடும்போது அதன்மூலம் விளைகின்ற தாவரங்களைப் பார்த்து விவசாயிகள் மகிழ்ச்சியடைவது போன்றதாகும். பின்னர், அதே பயிர் காய்ந்துவிடுகின்றது. அது மஞ்சளித்துப் போவதையும், பின்னர், பதராகிவிடுவதையும் நீர் பார்க்கலாம். (இதற்கு மாறாக) மறுமை எத்தகைய இடமெனில், அங்கு கடும் தண்டனை இருக்கிறது. அல்லாஹ்வின் மன்னிப்பும் திருப்தியும் இருக்கின்றன. ஆனால், உலக வாழ்க்கை ஓர் ஏமாற்றுச் சாதனமே தவிர வேறெதுவுமில்லை. (திருக்குர்ஆன் 57:20)**

**● பெண்கள், பிள்ளைகள், தங்கம் மற்றும் வெள்ளியினாலான பெருங் குவியல்கள், உயர்ரகக் குதிரைகள், கால்நடைகள் மற்றும் வேளாண்மை நிலங்கள் ஆகியவற்றின் மீது மோகம் கொள்வது மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டுள்ளது. ஆனால் இவை அனைத்தும் இவ்வுலகின் சில நாள் வாழ்க்கைக்குரிய சாதனங்களே ஆகும். திண்ணமாக அழகிய உறைவிடம் அல்லாஹ்விடம்தான் இருக்கின்றது.. (திருக்குர்ஆன் 3:14)**

**● (மனிதர்களில்) அழகிய செயலுடையவர்கள் யார் என்று அவர்களைச் சோதிப்பதற்காக, நிச்சயமாக பூமியிலுள்ளவற்றை அதற்கு அலங்காரமாக நாம் ஆக்கினோம். (திருக்குர்ஆன் 18:7)**

# அற்பமானவைகள் எவ்வாறு இறைவனாகும்?

அறிவியல் முன்னேற்றம் கண்டு இன்று அதன் ஆராய்ச்சிகளுக்கு எட்டிய பிரபஞ்சத்தின் அளவு 93 பில்லியன் ஒளியாண்டுகள் ஆகும். அதாவது, 8800000…......000 (22 பூஜ்ஜியங்கள்) கிலோமீட்டர் தூரம் கொண்டது அறிவியலின் பார்வைக்கு எட்டிய உலகு. எட்டாத உலகோடு ஒப்பிடும்போது இது வெறும் 4 சதவீதம் மட்டுமே என்பது அறிவியலின் கணிப்பு. எட்டாத மீதியை கரும்பொருள் என்றும் கருஞ்சக்தி (dark matter, dark energy) என்றும் பெயரிட்டு அழைக்கிறார்கள் அறிவியலாளர்கள். அவ்வளவும் திருக்குர்ஆன் கூறும் ஏழு வானங்களில் முதல் வானத்தில் ஒரு மிகச்சிறு அங்கமே. அப்படியானால் அவற்றுக்கு அப்பாலுள்ள வானங்கள் எவ்வளவு பிரம்மாண்டமானவை என்பதை நீங்கள் சிந்திபோர் உணரலாம். இவற்றையெல்லாம் படைத்து அதிபக்குவமாக இயக்கிவரும் இறைவன் எவ்வளவு பிரம்மாண்டமானவன்!



அப்படியானால் ஒரு மாபெரும் தூசுப்படலத்தில் ஒரு சிறு துகள் போன்றது நாம் இன்று வாழும் பூமி. அதன் மேல் ஒட்டிக்கொண்டு வாழும் ஒரு நுண்ணிய துகள் போன்றவன் மனிதன். அந்த மனிதனுக்கு இருக்கும் பார்த்தல், பேசுதல், கேட்டல் போன்ற ஆற்றல்கூட இல்லாத பொருட்களை மனிதர்கள் கடவுள் என்று பாவித்து வணங்கி வருவதை நாம் பரவலாகப் பார்க்கிறோம்.

- **வானங்களிலும் பூமியிலும் உள்ளோரெல்லாம் அவனுக்கே உரியோராவார்கள் மேலும் அவனிடம் இருப்பவர்கள் அவனுக்கு வணங்குவதை விட்டுப் பெருமையடிக்க மாட்டார்கள் சோர்வடையவுமாட்டார்கள். இடைவிடாமல் அவர்கள் இரவிலும், பகலிலும் அவனைத் துதித்துக் கொண்டே இருக்கிறார்கள். (திருக்குர்ஆன் 21:19,20)**

மிக அற்பமான ஆறடி உயர மனிதன் தன்னைத் தான் பெரியவனாக நினைத்துக் கொண்டு அகங்காரம் கொள்வதற்குக் காரணம் அவனது பார்வைக்கு எட்டியது மட்டுமே உலகு என்ற அவனது குறுகிய சிந்தனையும் அவற்றுக்கு அப்பாற்பட்டவற்றைப் பற்றிய அறியாமையும் ஆராயாமையும்தான். அவனைவிட பிரம்மாண்டமான படைப்பினங்கள் அவனது புலன்களுக்கு எட்டாது வாழ்கின்றன. அவற்றில் ஒன்றுதான் வானவர்கள் என்ற இனம். அவர்கள் இவனைப் போல பெருமை அடிப்பதில்லை என்கிறான் இறைவன். தொடர்ந்து இந்த அற்பமான பூமியில் இருந்துள்ளவற்றை கடவுளாக பாவித்து வணங்கும் மனிதனிடம்

*அவற்றின் பலவீனம் பற்றிய சிந்தனையை தூண்டுகிறான்:*

● **பூமியில் உள்ளவற்றிலிருந்து இவர்கள் தெய்வங்களை எடுத்துக் கொண்டிருக்கின்றார்களே! அவை (இறந்தோரை) உயிர் கொடுத்து எழுப்புமா? (திருக்குர்ஆன் 21:21)**

## உண்மை இறைவனைத் தவிர வேறு தெய்வங்கள் சாத்தியமா?

*அற்பமான பூமியில் மட்டுமல்ல வானங்களிலும் அவற்றுக்கு அப்பாலும் வேறு கடவுள்கள் இருப்பது சாத்தியமல்ல என்பதை உணர சாமானிய அறிவே போதுமானது. சாதாரணமாக ஒரு பேருந்துக்கு இரண்டு ஓட்டுனர்கள் இருந்தாலோ ஒரு கல்லூரிக்கு இரு முதல்வர்கள் இருந்தாலோ அங்கு என்ன விபரீதங்கள் நடக்கும் என்பதை நாம் நன்றாக அறிவோம். பூமி மற்றும் சூரிய குடும்பத்தின் இதர கோள்கள் இன்னும் அவற்றுக்கப்பாலுள்ளவற்றில் காணப்படும் ஒழுங்கான கட்டமைப்பையும் அதிபக்குவமான இயக்கங்களையும் சிந்திப்போர் இவ்வுலகுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கடவுள்கள் சாத்தியமே இல்லை என்பதை அறிவார்கள்.*

● **(வான், பூமி ஆகிய) இவற்றில் அல்லாஹ்வையன்றி வேறு தெய்வங்கள் இருந்திருந்தால், நிச்சயமாக இவையிரண்டும் அழிந்தே போயிருக்கும், அர்ஷுடைய இறைவனாம் அல்லாஹ், அவர்கள் வர்ணிக்கும் (இத்தகைய) தன்மைகளிலிருந்து மிகவும் தூய்மையானவன். 21:22)**

*(அல்லாஹ் என்றால் 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்' என்பது பொருள்)*

*பல தெய்வங்கள் உண்மையில் இருந்திருந்தால் அவர்களுக்குள் போட்டி, பொறாமை ஏற்பட்டு அவரவர்களுக்கு சொந்தமானதை வசப்படுத்திக் கொண்டு அவற்றின்மீது ஆட்சி செய்துகொண்டு இருப்பார்கள். ஒன்றையொன்று வெல்ல முற்பட்டு அழிவும் நாசமுமே நிகழ்ந்து இருக்கும் என்பதை சற்று சிந்தித்தால் அறியலாம். எனவே உண்மை என்னவெனில் இறைவன் என்பவன் ஒரே ஒருவன் மட்டுமே அவன் மட்டுமே அனைத்தின் மீதும் பேராற்றல் கொண்டவன். முழுமையான ஆட்சியதிகாரம் அவனுக்கு மட்டுமே உரியது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அவன் ஏகன், தனித்தவன், அவனைப் போன்றதோ அவனுக்கு நிகரான சக்தியோ அறிவோ ஆற்றலோ கொண்ட எதுவும் எங்கும் இல்லை என்பதே உண்மை!*

● **அவன் செய்பவை பற்றி எவரும் அவனைக் கேட்க முடியாது ஆனால், அவர்கள் தாம் (அவர்கள் செய்யும் செயல்கள் பற்றி) கேட்கப்படுவார்கள். (திருக்குர்ஆன் 21:23)**

## இணை தெய்வங்களை வணங்க இறைவன் சொல்லவில்லை!

*இறைவன் அல்லாதவற்றை வணங்கும் பழக்கம் இறைவனின் பெயரால் மக்களை சுரண்ட முனையும் இடைத்தரகர்களாலும் ஆதிக்க சக்திகளாலும் உருவாக்கப்பட்ட ஒன்று. அதற்கு இறைவன் வழங்கிய அங்கீகாரமோ அத்தாட்சிகளோ அறவே இல்லை என்பது உண்மையான இறைவேதங்களை ஆராயும்போது அறியவரும் உண்மையாகும்.*

● **அல்லது, அவர்கள் அல்லாஹ்வையன்றி (வேறு) தெய்வங்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்களா? "அப்படியாயின், உங்கள் அத்தாட்சியை நீங்கள் கொண்டு வாருங்கள் இதோ என்னுடன் இருப்பவர்களின் வேதமும், எனக்கு முன்பு இருந்தவர்களின் வேதமும் இருக்கின்றன" என்று நபியே! நீர் கூறும் ஆனால் அவர்களில் பெரும்பாலோர் சத்தியத்தை அறிந்து கொள்ளவில்லை ஆகவே அவர்கள் (அதைப்) புறக்கணிக்கிறார்கள். (திருக்குர்ஆன் 21:24)**

### ஆதிமுதலே போதிக்கப்படும் உண்மை இது!

இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் ஏக இறைவன் மட்டுமே வணக்கத்திற்கு உரியவன் என்பதும் அவனல்லாத எதுவும் வணங்குவதற்குத் தகுதிவாய்ந்தவை அல்ல என்பதும் ஆதிமுதலே காலாகாலமாக போதிக்கப்பட்டு வரும் உண்மையாகும்.

● **(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும்: "நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹீ (இறைச்செய்தி) அறிவிக்காமலில்லை. (திருக்குர்ஆன் 21:25)**


# எதிரிகள் ஏசினாலும் பொறுமை

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஆட்சித் தலைவராக இருந்தபோது மதீனாவில் வாழ்ந்த சிறுபான்மை சமூகமான யூதர்களின் நபிகளாரை நோவினை தரும் வார்த்தைகளை பயன்படுத்தி ஏளனம் செய்து வந்தார்கள். ஆனால் அண்ணல் நபிகளார் அவற்றை பொறுமையோடு எதிர்கொண்டார்கள். அதற்காக அவர்கள் கண்டிக்கப்படவும் இல்லை, தண்டிக்கப்படவும் இல்லை.

நபி(ஸல்) அவர்களின் துணைவியார் ஆயிஷா(ரலி) கூறினார்கள்: 'யூதர்களில் ஒரு குழுவினர் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் வந்து 'அஸ்ஸலாமு அலைக்கும்' (உங்கள் மீது இறைவனின் சாந்தி உண்டாகட்டும்) என்று வழக்கமாகக் கூறும் முகமனுக்கு பதிலாக அவரை கேலி செய்யும் நோக்கத்தோடு 'அஸ்ஸாமு அலைக்கும்' (உங்களுக்கு மரணம் உண்டாகட்டும்) என்று (சற்றே மாற்றி சலாம்) கூறினர். அவர்கள் கூறியதைப் புரிந்து கொண்ட நான், அவர்களுக்கு 'வ அலைக்கும் அஸ்ஸாமு வல்லஅனா (அவ்வாறே உங்களின் மீது மரணமும் சாபமும் உண்டாகட்டும்)' என்றேன். அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள், 'ஆயிஷா! நிதானம்! எல்லா விஷயங்களிலும் நளினத்தைக் கையாளுவதையே அல்லாஹ் விரும்புகிறான்' என்று கூறினார்கள். அப்போது நான், 'இறைத்தூதர் அவர்களே! அவர்கள் சொன்னதை நீங்கள் கேட்கவில்லையா?' என்று கேட்டேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள், 'நான்தான் 'வ அலைக்கும்' (அவ்வாறே உங்களுக்கு உண்டாகட்டும்) என்று சொல்லிவிட்டேனே! (அதை நீ கவனிக்கவில்லையா?)' என்று கேட்டார்கள்.' (நூல்: புகாரி)

# ஜீவகாருண்யம் என்ற பெயரில் அராஜகம்

‘ஒரு அப்பாவி ஜீவியை நாங்கள் பாதுகாக்கிறோம்’ என்று கூறிக்கொண்டு களத்தில் இறங்கி பல அப்பாவி மனிதர்களை கொன்று குவிக்கிறார்கள். பலரின் வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கி அவர்களை நடுத்தெருவில் விட்டுவிடுகிறார்கள். சில மாநில அரசுகளும் இவர்கள் மீது சட்டம் பாயாமல் பாதுகாப்பு கொடுத்து வருவது மட்டுமல்லாமல் இவர்களை மாலையிட்டு கவுரவிக்கவும் செய்கிறார்கள்.



ஆம், ‘பசுக் காவலர்கள்’ படை ஆன்மீகத்தின் பெயரால் வடஇந்திய மாநிலங்களில் நடத்திவரும் இந்த பயங்கரவாதம் நாடுமுழுக்க பல விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதை அறிவோம். காலாகாலமாக மாமிச விற்பனை தொடர்பான வியாபாரம் மற்றும் தொழில்கள் மூலம் சம்பாதித்து வந்தவர்கள் செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள். உழுவதற்குத் தகுதியில்லாத கிழ மாடுகளை மாமிச வியாபாரிகளுக்கு விற்று புதிய இளமாடுகளை வாங்கி தங்கள் விவசாயத்தைத் தொடர்ந்த விவசாயிகளுக்கும் பிழைப்பில் மண்! சங்கிலித்தொடர் போல இன்னும் பல விபரீதங்களுக்கு காரணமாகிறது இந்த “ஜீவகாருண்ய” செயல்.

### பாவம் எது? புண்ணியம் எது?

இந்தப் பசுக் காவலர்கள் முக்கியமாக முன்வைக்கும் வாதம் ஒரு உயிர் வாழ்வதற்காக இன்னொரு உயிரைக் கொல்வது பாவம் என்பதே! இதன் உண்மைத்தன்மை என்ன? உணவுக்காக இன்னொரு உயிரைக் கொல்வது பாவமா என்ற கேள்விக்கு விடைகாண முயல்வோம்.

இக்கேள்விக்கு பதில் காண்பதற்கு முன்னால் நாம் பாவம் எது, புண்ணியம் எது என்பதை தீர்மானிக்க ஒரு அளவுகோலைக் கண்டறியக் கடமைப் பட்டுள்ளோம். மனிதனின் குறுகிய அறிவு கொண்டோ பெரும்பான்மை மக்களின் வாக்கெடுப்பு மூலமாகவோ முன்னோர்களின் பழக்கவழக்கங்களின் அடிப்படையிலோ அந்த அளவுகோலை நிர்ணயிக்க முடியாது. ஆனால் இவ்வுலகின் உரிமையாளனும் அனைத்து படைப்பினங்களையும் அதிபக்குவமாக அறிந்தவனும் முக்காலத்தையும் உணரக்கூடியவனும் ஆகிய அந்த இறைவனுக்கு மட்டுமே அந்த அளவுகோலைத் தர முடியும். மேலும் நாளை இறுதித் தீர்ப்புநாளின் போது நம் பாவபுண்ணியங்களை விசாரித்து அதன் அடிப்படையில் நமக்கு சொர்கத்தையோ நரகத்தையோ வழங்க இருப்பவனும் அவனே. எனவே அவன் எதைச் செய் என்று ஏவுகிறானோ அதுவே புண்ணியம் எதைச் செய்யாதே என்று தடுக்கிறானோ அதுவே பாவம் என்பதை நாம்

அறியவேண்டும்.

## இறைவனின் பார்வையில் இது பாவமல்ல

அந்த அடிப்படையில் உணவுக்காக விலங்குகளைக் கொல்வது பாவமல்ல என்று இறைவேதங்கள் மூலம் உணரலாம். குறிப்பாக இறுதி இறைவேதம் திருக்குர்ஆனில் இறைவன் கூறுகிறான்:

- **"இறைவிசுவாசிகளே! (நீங்கள் செய்து கொண்ட) உடன்படிக்கைகளை (முழுமையாக நிறைவேற்றுங்கள். உங்கள் மீது ஓதிக்காட்டி இருப்பவைத் தவிர மற்றைய நாற்கால் பிராணிகள் உங்களுக்கு (உணவிற்காக) ஆகுமாக்கப் பட்டுள்ளன." ( திருக்குர்ஆன் 5:1)**
- **"கால்நடைகளையும் அவனே படைத்தான். அவற்றில் உங்களுக்குக் கத கதப்பு(ள்ள ஆடையணிகளு)ம் இன்னும் (பல) பலன்களும் இருக்கின்றன. அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கவும் செய்கின்றீர்கள்." (திருக்குர்ஆன் 16:5)**
- **"நிச்சயமாக உங்களுக்கு பிராணிகளில் ஒரு படிப்பினை இருக்கிறது. அவற்றின் வயிறுகளிலிருந்து (சுரக்கும் பாலை) நாம் உங்களுக்குப் புகட்டுகிறோம். இன்னும் அவற்றில் உங்களுக்கு அநேக பயன்கள் இருக்கின்றன. அவற்றி(ன் மாமிசத்தி)லிருந்து நீங்கள் புசிக்கிறீர்கள்." (திருக்குர்ஆன் 23:21)**

### இந்து வேதங்களில் சான்றுகள்

ஒரு காலத்திலும் புலால் உண்பதை இறைவன் தடுத்ததாக எங்கும் நீங்கள் காண முடியாது. உண்மையில் இந்து மதத்தின் சட்ட நூலாகக் கருதப்படும் மனுசாஸ்திரம் இவ்வாறு கூறுகிறது

- **"உணவு உட்கொள்பவர் - மாமிச உணவு உட்கொள்வாராயின் - அவர் உண்ணும் மாமிச உணவு அவருக்கு எந்த கெடுதியும் அளிப்பதில்லை. எந்நாளும் மாமிச உணவை உட்கொண்டாலும் சரியே. ஏனெனில் சில படைப்புகளை உண்பதற்காகவும் - சில படைப்புகளை உண்ணப்படுவதற்காகவும் படைத்தவன் கடவுளே". (ஐந்தாவது அத்தியாயம் முப்பதாவது வசனம்)**
- **"மாமிச உணவு உண்பதும் - சரியான தியாகமே. இது மரபு ரீதியாக அறியப்பட்டு வரும் கடவுளின் கட்டளையாகும்". (மனுசாஸ்திரம் 5:39)**
- **"பலியிடுவதற்கென கடவுள் சில கால்நடைகளை படைத்திருக்கின்றான். எனவே பலியிடுவதற்காக கால்நடைகளை அறுப்பது என்பது - கால்நடைகளை கொல்வது ஆகாது." (மனுசாஸ்திரம் 5:40)**

உண்மையில் பசுவானாலும் கொசுவானாலும் பாக்டீரியா ஆனாலும் உயிர் உயிரே! இவ்வுலகைப் படைத்தவன் ஏற்படுத்திய உணவுச்சங்கிலியில் பலவீனமான உயிர்கள் பலமான உயிர்களுக்கு உணவாகின்றன. அந்த வகையில் எந்த ஜீவிக்கு எவ்வளவு உரிமை உள்ளது என்பதைத் தீர்மானிக்கும் அறிவாற்றலும் அதிகாரமும் முழுமையான உரிமையும் இறைவனுக்கே உரியது என்பதைப் புரிந்துகொண்டு அதன்படி செயல்பட்டால் இவ்வுலக வாழ்க்கையும் வளமிக்கதாக அமையும். மறுமையில் இறைவனின் பொருத்தமும் கிடைக்கும்.

# சைவமே அசைவமானால் எதை உண்பேன்?

பசுவதையை சட்டம் போட்டு தடை செய்து கொண்டு நாடாளும் அந்த "நல்லோரிடம்" மாமிசத்தை உண்ணாவிட்டால் எதை உண்பது என்று கேட்டால் தாவர உணவை உண்ணுங்கள் என்று தயங்காமல் பதில் கூறுகிறார்கள். தாவரங்கள் உயிரில்லாதவை உணர்வில்லாதவை என்பது இவர்களின் வாதமானால் அது அறியாமையின் வெளிப்பாடே.

**தாவரங்களுக்கும் உயிர் உண்டு**

முந்தைய காலங்களில் தாவரங்களுக்கு உயிர் இல்லை என மனிதர்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைய அறிவியல் யுகத்தில் - தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்பது அகிலம் முழுவதும் அறிந்த விஷயம். விஞ்ஞானி ஜகதீஷ் சந்திரபோஸ் தாவரங்களுக்கு உயிர் உண்டு அவை சுவாசிக்கின்றன் உணவு உட்கொள்கின்றன என்பதை அறிவியல்பூர்வமாக ஆய்வு செய்து நிரூபித்தார். நுண்ணிய மின் கருவிகளைக் கொண்டு, தாவரங்களின் உயிர் அணுக்களை ஆராய்ந்தவர் அவர். ஆக, சைவ உணவு உண்ணுபவர்களாக இருந்தாலும் உயிர்களை கொல்லாமல் வாழ்வது சாத்தியமல்ல என்பதே உண்மை!

**தாவரங்களாலும் வலியை உணர முடியும்:**


உயிருள்ளவை ஆனாலும் தாவரங்களால் வலியை உணர முடியாது. எனவே தாவரங்களை கொல்வது - உயிருள்ள பிராணிகளை கொல்வதைவிட - குறைந்த பாவம்தான் என்றும் இவர்கள் வாதிடலாம். இன்றைய அறிவியல் - தாவரங்களும் வலியை உணர்கின்றன என்று



நமக்குக் கற்றுத் தருகிறது. 20 Hertz க்கு குறைவான சப்தத்தையும் 20000 Hertz க்கு மேற்பட்ட சப்தத்தையும் மனிதனால் கேட்க முடியாத காரணத்தால் தாவரங்கள் வலியினால் அலறுவதை நாம் அறிய முடியாது. அமெரிக்காவில் உள்ள விவசாயி ஒருவர் ஆராய்ச்சி செய்து தாவரங்கள் அலறுவதை - மனிதர்கள் கேட்கும் அளவுக்கு மாற்றக்கூடிய கருவி ஒன்றினை கண்டு பிடித்திருக்கிறார். மேற்படி கருவியின் மூலம் தாவரங்கள் தண்ணீருக்காக அலறுவதை மனிதர்களால் கேட்க முடியும். பின்னால் வந்த வேறு சில ஆராய்ச்சியாளர்கள் தாவரங்களும் - மகிழ்ச்சி - வருத்தம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆற்றலை கொண்டவை என்றும் கண்டு பிடித்துள்ளனர். இவ்வாறு தாவரங்களும் வலியை உணரக் கூடியவை. மகிழ்ச்சி வருத்தம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றலை கொண்டவை என்பதை அறிவியல் உண்மைகள் நமக்கு அறிவிக்கின்றன.

## உயிருண்ணும் தாவரங்கள்

அறிவியலும் ஆராய்ச்சிகளும் வளரவளர தாவரங்களின் பல்வேறு மர்மங்களை உலகம் அறிந்து வருகிறது. தாவரங்களுக்கு நம்மைப் போல் நரம்புகள் இல்லை. எனினும், உணர்ச்சியை அறிவிக்க, தாவரங்களில் உள்ள சில உயிரணுக்கள் பயன்படுகின்றன. தொட்டாற்சுருங்கி (Mimosa - மிமோசா) என்று ஒரு தாவரம் இருக்கிறது. இது தொட்டவுடன் சுருங்கிக் கொள்ளும். ஏதேனும் பட்டால், இதன் இலைகள் உணர்ச்சியின்றி மூடிக்கொள்ளும். தாவரத்திற்கு உணர்ச்சி உண்டு என்பதை நிரூபிக்க இந்தத் தாவரம் ஒன்றே போதும்.



எந்த தாவரங்களை அப்பாவிகள் சாதுவானவை என்று நம்பி வந்தோமோ அவற்றுள் உயிர்களை கொன்று உண்ணும் வகைகளும் (carnivorous plants) உள்ளன என்பதை படம்பிடித்துக் காட்டும் வீடியோக்களும் இன்று இணையத்தில் உலா வருகின்றன. சில தாவரங்களின் பூக்கள் புழுபூச்சிகளை தங்கள் அழகிய வண்ணத்தால் ஈர்த்து அவை அதன்மீது வந்து உட்காரும்போது தொட்டாற்சிணுங்கி மூடிக்கொள்வதைப் போல இறுக்கமாக மூடி அவற்றைக் கொல்கின்றன. சைவம் என்று மக்கள் ஆழமாக நம்பியிருந்த தாவரங்களும் அசைவத்தின் மூலமே தங்கள் உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்கின்றன என்பதை பசுக்காவலர்கள் அறிந்தால் அவர்களின் அடுத்த வாதம் என்னவோ?

தான் படைத்த படைப்புகளை இவ்வுலகில் எவ்வாறு சமநிலையில் வைத்திருக்க வேண்டும் என்பதை அறிந்தவன் இவற்றைப் படைத்தவன் ஒருவன் மட்டுமே. எனவேதான் மனித வர்க்கம் - மாமிச உணவு

உட்கொள்ள இறைவன் அனுமதி அளித்திருக்கிறான்.

● **“மனிதர்களே! பூமியிலுள்ள பொருட்களில் அனுமதிக்கப் பட்டவற்றையும் பரிசுத்தமானவற்றையும் உண்ணுங்கள்.“ (குர்ஆன் 2:168)**

பசுவின் மீது மட்டுமல்ல இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிரினங்கள் மீதும் இரக்கம் காட்ட வேண்டும் என இஸ்லாம் கட்டளையிடுகிறது. அதே சமயம் - இறைவன் இந்த பூமியைப் படைத்து - அதில் மனித பயன்பாட்டுக்கான கால்நடைகளையும் - தாவரங்களையும் படைத்திருக்கிறான் - என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. இறைவன் படைத்தவைகளை நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளாகவும் அருட்கொடையாகவும் பயன்படுத்திக்கொள்வது மனிதனிடம்தான் இருக்கிறது.

● **இறைவன் அருளிய உணவிலிருந்து உண்ணுங்கள், பருகுங்கள் பூமியில் குழப்பம் செய்து கொண்டு திரியாதீர்கள். (திருக்குர்ஆன் 2:60)**

# வாசகர் எண்ணம்

● நான் தொடர்ந்து தங்களுடைய திருகுர்ஆன் நற்செய்தி மலர் புத்தகத்தை (பொக்கிஷத்தை) படித்து வருகிறேன். ஆகஸ்ட் 2018 இதழில் அற்ப ஜீவிக்குள் அசரவைக்கும் அற்புதங்கள் படித்தேன். அதில் வியக்கத்தக்க விந்தைகள் பற்றிய இறைவனின் திருமறையில் அற்புத செய்தி கண்டு உணர்ந்தேன். இந்த புத்தகத்தின் வாயிலாக மேலும் பல தகவல்களை அறிய உதவியமைக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

**- வி.எம். கண்ணன், சென்னை 69**

● கொசுக்களினால் விளையும் தீமையைப் பற்றி மட்டும்தான் நான் அறிந்திருந்தேன். இறைவனின் நுணுக்கமான படைப்புகளில் கொசுவும் ஒன்று என்று இப்போது அறிந்துக்கொண்டேன் . அல்லாஹ்வின் வல்லமையை என்றென்றும் புகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதை கொசுவின் மூலம் சிறப்பாக என் உள்ளத்தில் பதிந்து கொண்டேன். ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு சிறப்பு தன்மைகளையும் வெளியிட்டுக்கொண்டு வருவது பாராட்டுக்குரியது .

**- தி.எம். பெரோஸ்கான், தேனீ**

● ஜூலை 2018 இதழில் மனமாற்றம் (மதமாற்றமில்லை) குணமாற்றம் (உண்மை -பணிவு - பொறுமை மேலும் மன்னிப்பால்) விளையும் மறுமலர்ச்சி பற்றியும் , கோபத்தை மென்று விழுங்குதல் பற்றியும் எழுதியது சிறப்பு. திருக்குரான் நற்செய்தி மலர் மாதத்திற்கு மாதம் காலத்திற்குத் தேவையான கருத்துக்களோடு தொகுத்து வழங்கி வருகிறீர்கள். இந்த சேவையை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக. ஆமீன்.

**- ஷேக் தாவூத், மாணிக்கம் பாளையம், ஈரோடு**

● உங்கள் அனைவருக்கும் அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் வெற்றி தருவானாக. உங்கள் சந்ததிகளுக்கும் அவ்வாறே வெற்றி தருவானாக. நலமுடன் ஆயுளை நீட்டி தந்தருள்வானாக, உயர்ந்த சுவர்க்கத்தை தருவானாக. **- நஸீர், திருச்சி**

# மரம் என்ற இறைவரம்!


காடுகளில், வீடுகளில், தோட்டங்களில், சாலை ஓரங்களில், பூங்காக்களில் நின்றுகொண்டு அன்புப் புரட்சியையும் அமைதிப் புரட்சியையும் அழகாக நிகழ்த்திக் கொண்டிருப்பவை மரங்கள் ஆன்மீகவாதிகளுக்கும் அறிவியல்வாதிகளுக்கும் அன்றாடங் காய்ச்சிகளுக்கும் கூட ஆறுதலும் அரவணைப்பும் தருவதே மரங்கள். கடுமையான வெயிலில் நடைபயணம் செய்து ஒதுங்க இடமில்லாது துடிக்கும் ஒரு பயணியிடம் கேட்டால்தான் மரநிழலின் அருமை என்னவென்று தெரியும்.

மரங்கள் நிழலைத் தருகின்றன் மரங்கள் மழை மேகங்களை ஈர்த்து மழை பொழிய வைக்கின்றன் மரங்கள் இருக்கும் இடத்துக்கு அழகூட்டுகின்றன. அனைத்துக்கும் மேலாக, மரங்கள் மனித இனம் உயிர் வாழத்தேவையான பிராண வாயு என்கிற ஆக்சிஜனை உற்பத்தி செய்து, மனித இனம் உயிர்வாழத் தேவையற்ற கார்பன்-டை-ஆக்சைடை உறிஞ்சி அழிக்கின்றன.

ஆனால் ”ஏம்பா மரம் மாதிரி நிற்கிறே?” என்ற வார்த்தைகளை ஒன்றும் செயல்படாமல் இருக்கும் மனிதர்களைப் பார்த்து கேட்பதை நாம் அடிக்கடி செவியுறுகிறோம்.ஆனால் உண்மையில் அந்த வார்த்தைகளில் பொருள் இருக்கிறதா? மரம் என்றால் அது செயல்படாததா? ஒன்றுக்கும் பயனற்றதா? இப்படி மரத்தைக் கேவலமாக எடுத்தெறிந்து பேசுவது முறைதானா? உண்மையில் மரம் பயனற்றதா? மரம் என்றால் அது வெறும் கட்டை மட்டும்தானா?

### மரங்களின் மறுபக்கம்

இந்தக் கேள்விகளை நாம் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு கேட்டுப் பார்த்தால் மரங்களின் மறுபக்கங்கள் நமக்குப் புரியவரும். இன்றைய அறிவியல் ஆராய்ச்சிகள் விலங்குகள், மனிதர்கள் போலவே, மரங்களுக்கும் உயிர் உண்டு என்கின்றன. சுவாசித்தல், உணவு உட்கொள்ளுதல், உணவை ருசித்தல், மகிழ்ச்சி - வருத்தம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் ஆற்றல் போன்றவை உண்டு என்பவை புலனாகின்றன




- மரங்கள் தம் வேர்களின் மூலம் பூமிக்கடியிலுள்ள மண்ணிலிருந்து உணவை உறிஞ்சிப் பெறுகின்றன. தாவரங்களின் இலைப்பகுதிகள் காற்றைச் சுவாசிக்கின்றன.

● நம் உடலில் இரத்தம் ஓடுவது போலவே, “தாவரச் சாறு“ (ஸுயி -சாப்) என்னும் ஒருவகைச் சாறு மரங்களின் உடல்முழுவதும் வியாபித்துள்ளது. இந்தத் தாவரச் சாற்றை, மரத்தின் உயிரணுக்கள் மரத்தின் உடல் முழுவதற்கும் எடுத்துச் செல்கின்றன.

● விலங்குகளால் மரங்களுக்கு ஏற்படும் காயங்களைத் மரங்களிலுள்ள ‘புண்திசு“ (Layers of Wound Tissue - லேயர்ஸ் ஆ.ஂ.ப் வுண்ட் டிஷ்யூ) என்னும் அடுக்கு காக்கிறது.

மொத்தத்தில், மரங்களும் நம்மைப் போலவே வாழ்கின்றன என்பதே உண்மை! காலம் கடந்து அறிவியல் ஆராய்ச்சிகள் இவற்றை சொன்னாலும் இறைவன் மரங்களைப் பற்றி நமக்கு முன்னரே கூறியுள்ளான்:

**● வானங்களிலுள்ளவர்களும் பூமியிலுள்ளவர்களும் சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் மலைகளும் மரங்களும் பிராணிகளும் மனிதர்களில் அதிகமானோரும் அல்லாஹ்வுக்கு சுஜூது செய்கின்றன என்பதை நீர் பார்க்கவில்லையா? (திருக்குர்ஆன் 22:18)**

**● (கிளைகளில்லாச்) செடி கொடிகளும், (கொப்புங் கிளையுமாக வளரும்) மரங்களும் - (யாவும்) அவனுக்கு சிரவணக்கம் செய்கின்றன. (திருக்குர்ஆன் 55:6)**

## சுற்றுப்புற சூழலில் மரங்களின் பங்கு

இயற்க்கை என்ற சொல்லைக் கேள்விப்படும் போதே நம் கண்முன் நிற்பது மரங்களே! அந்த இயற்கையின் ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு உயிரியும் பரஸ்பரம் ஒன்றோடொன்று இனணந்து செயற்படுகின்றது. மனிதனும் அவனது வாழ்வும் இந்த இயற்கையோடு பின்னிப் பினைக்கப்பட்டே காணப்படுகின்றது. அவனால் ஒரு கணப்பொழுதும் இதனை விட்டு விலகி வாழ முடியாது. நமது சுற்றுப்புற சூழல் பல இயற்கைச் சமநிலைகளால் இயங்குகிறது. ஆக்சிஜன் வட்டம், கார்பன் வட்டம், நைட்ரஜன் வட்டம் போன்றன இவற்றுள் சிலவாகும். உணவுச் சங்கிலி ஒழுங்கு, சக்தி வட்டம் என்பனவும் இயற்கையின் அற்புதங்களாகும் .இந்தக் கட்டமைப்பில் ஏற்படும் சிறியதொரு மாற்றமும் பாரிய எதிர்விளைவுகளை ஏற்படுத்தி விடும். இவ்வாறு நன்கு திட்டமிடப்பட்ட மிக நுணுக்கமான அடிப்படையில் ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கும். சூழலின் பிரிக்க முடியாத மிக முக்கிய அங்கமாக மனிதன் இருக்கிறான்.

## பரீட்சைக்காகவே உலகம்

மனிதனே அனைத்துக்கும் மையமாக விளங்குகிறான். ஆம், அனைத்தையும் இறைவன் அவனுக்காகவே படைத்துள்ளான். ஆனால் இது தற்காலிகமான ஒன்று. காரணம் இந்த ஏற்பாட்டின் நோக்கம் அவனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே.

**● (மனிதர்களில்) அழகிய செயலுடையவர்கள் யார் என்று அவர்களைச் சோதிப்பதற்காக, நிச்சயமாக பூமியிலுள்ளவற்றை அதற்கு அலங்காரமாக நாம் ஆக்கினோம். இன்னும், நிச்சயமாக நாம் அதன் மீது உள்ளவற்றை (ஒரு நாள் அழித்துப்) புற்பூண்டில்லாப் பாலைநிலமாக்கி விடுவோம். (திருக்குர்ஆன் 18:7, 8)**

இந்த தற்காலிகப் பரீட்சைக்கூடம் ஒருநாள் முடிவுக்குக் கொண்டு வரப்படும். அதன்பின்னர் இறைவனின் கட்டளை வரும்போது மக்கள் அனைவரும் விசாரணைக்காக மீண்டும் உயிர்கொடுத்து எழுப்பப்படுவார்கள். அன்று மனிதர்கள் செய்த வினைகளின் அடிப்படையில் சொர்க்கமோ நரகமோ விதிக்கப்படுவார்கள். அதுவே அவர்களின் நிரந்தர வாழ்விடமாக அமையும். சொர்க்கம் செல்ல முக்கியமாக நம்மைப்படைத்த இறைவன் வழங்கிய அருட்கொடைகளுக்கு நன்றியறிதலோடு வாழ்வதும் அவனுக்கு செய்நன்றி கொல்லாதிருப்பதும் ஆகும்.

● **அவனே உங்களுக்காகப் பூமியை விரிப்பாகவும் வானத்தை முகடாகவும் ஆக்கினான். அவனே மேலிருந்து மழையைப் பொழியச் செய்து அதைக் கொண்டு உங்கள் உணவுக்காக விளைபொருள்கள் அனைத்தையும் வெளிப்படுத்துகிறான். எனவே, (இவற்றை எல்லாம்) நீங்கள் அறிந்திருந்தும் அல்லாஹ்விற்கு இணைகளை ஏற்படுத்தாதீர்கள். (திருக்குர்ஆன் 2:22)**

*நன்றி: நூ. ஜமீல் முஹம்மது*

# அன்பு காட்டுதல் இறைவிசுவாசியின் கடமை:

● **மேலும், இறைவனையே வழிபடுங்கள் அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையர்க்கும், நெருங்கிய உறவினர்களுக்கும். அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள் நிச்சயமாக இறைவன் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை (திருக்குர்ஆன் 4:36)**

**வறுமையின்போதும் அன்புகாட்டு!**

● **(உம்மிடம் பொருளில்லாமல் அதற்காக) நீர் உம்முடைய இறைவனின் அருளை ஆதரவு வைத்து (அதை) எதிர்ப்பார்த்திருக்கும் சமயத்தில் (உம்மிடம் எவரேனும் எதுவும் கேட்டு,) அவர்களை நீர் புறக்கணிக்கும்படி நேரிட்டால், (அப்போது) அவர்களிடம் கனிவான, அன்பான சொல்லையே சொல்வீராக! (திருக்குர்ஆன் 17:28)**

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

# மரம் நடுதல் இறைவிசுவாசியின் கடமை

**நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:**

**● இறைவிசுவாசத்திற்கு எழுபதிற்கும் அதிகமாக கிளைகள் உள்ளன. அதில் முதன்மையானது லாயிலாஹ இல்லல்லாஹ் (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை என்ற உறுதிமொழியை கூறுதல்) என்பதாகும். அதில் இறுதியானது துன்பம் தரும் பொருளை பாதையிலிருந்து அகற்றுவது. வெட்கமும் இறைவிசுவாசத்தின் ஒரு பகுதியாகும். (நூல்: முஸ்லிம்)**

**● மனிதன் இறந்து விட்டால், அவனது செயல்களும், அதற்குரிய நன்மைகளும் நின்று விடுகின்றன. இருப்பினும் மூன்றைத்தவிர. அவையாவன: 1.நிலையான தர்மம், 2.பயனுள்ள கல்வி, 3.இவருக்காக இவரது நற்குணம் வாய்ந்த பிள்ளை செய்யும் பிரார்த்தனை. (நூல்: முஸ்லிம்)**

மேற்கண்ட நபிமொழிகளின் ஒளியில் மரம் நடுதல் என்ற நிலையான தர்மத்தின் சிறப்பை உணரலாம். தொழுகை நோன்பு இவற்றோடு நின்றுவிடாமல் மக்களுக்கு பயன்தரும் செயல்பாடுகள் அனைத்தும் இறைவனுக்கு செய்யும் வழிபாடே என்கிறது இஸ்லாம் என்ற இறைமார்க்கம்.

## அறிவியல் தகவல்கள்

மரங்களை ஏன் நடவேண்டும் என்பதற்கு அறிவியல் ரீதியாக கீழ்கண்ட தகவல்களை அறிதல் நலம் பயக்கும்:

● ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள வளர்ந்த மரங்கள் ஒரு வருடத்தில் உள்ளே உறிஞ்சி காற்றை தூய்மைப்படுத்தும் கார்பனின் அளவு, ஒரு வாகனம் 26000 மைல் பயணிப்பதால் வெளியிடும் கார்பன் அளவிற்கு ஈடானதாகும், அதுமட்டுமல்லாமல், 18 மனிதர்கள் ஒரு வருடம் முழுதும் சுவாசிக்க தேவையான ஆக்சிஜனையும் அவை வெளியிடுகின்றன.

● ஒரு தனி மரம் ஆண்டுக்கு 260 பவுண்டுகள் ஆக்சிஜனை வெளியிடுகிறது. இது இரண்டு மனிதர்கள் ஒரு வருடம் சுவாசிக்க போதுமானதாகும். ஐம்பது வருடங்கள் வாழும் ‘ஒரு மரம்’ உற்பத்தி செய்யும் சேவைகளை பணத்தால் மதிப்பிட்டால் ஆக்சிஜன் US$ 30,000, சுத்திகரிக்கும் நீர் US$ 35,000 கார்பனை வடிகட்டுவதற்கான செலவு US$ 1,25,000 ஆகுமென்று ஒரு கணக்கீடு சொல்கிறது.

● அரசாங்கங்கள் நீரை சுத்திகரிக்கவும், கார்பன் வெளியேற்றத்தை குறைக்கவும் பல பில்லியன் டாலர்களைச் செலவிடுகின்றன. இவை அனைத்து சேவைகளையும் மரங்கள் இலவசமாகவே செய்து வருகின்றன. ஒருவேளை இலவசமாக இந்த சேவை கிடைப்பதால்தான் மரங்களின் அருமை நமக்குத் தெரியவில்லையோ என்னவோ. மரங்கள் செய்யும் இத்தகைய விலைமதிப்பற்ற சேவைகளைக் கூட பணத்தால் மதிப்பீடு செய்யப்படுவதற்குக் காரணம், பணத்தாசை கொண்ட பலரால் மரங்கள், பணத்தால் மதிப்பிடப்பட்டு வெட்டப்பட்டு விற்கப்படுவதுகூட ஒரு காரணமாக இருக்கலாம்.

● இவை மட்டும் அல்லாமல் மரங்கள் நில அரிப்பை தடுகின்றன் நிலத்தடி நீரின் அளவை உயர்த்துகின்றன் ஆறுகளின் பாதையையும் ஆற்றுப் பெருக்கையும் கட்டுப்படுத்துகின்றன் ஊரைக் குளிர்விக்கின்றன் குருவிகள் கூடுகட்டும் இடமாகி பல்லுயிர்களை பெருக்குகின்றன் பட்டுப் போன மரங்கள் வீட்டுக்காகவும் விறகுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. அனைத்தையும் விட 'நீரின்றி அமையாது உலகு ' என்ற நிலையில் அடிப்படையான மழை பெய்யக் காரணமாகின்றன் அதன் காரணமாக விவசாய உற்பத்திப் பொருள்கள் விளைவிக்கப்படுகின்றன என்ற மரங்களின் பணிகளுக்கெல்லாம் பணத்தால் மதிப்புப் போட்டால் இந்த உலகையே மரங்களுக்கு விலையாக கொடுத்தாலும் ஈடாகாது.

## திருடப்பட்டதும் தர்மாகிவிடும்

*நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:*

**● "எவரேனும் மரம் நடுவாரேயானால் அம்மரத்திலிருந்து எவ்வளவு உண்ணப்படுமோ அவ்வளவு தர்மம் செய்த நன்மை மரம் நட்டவருக்கு கிடைக்கும். அதிலிருந்து திருடப்பட்டதும் தர்மாகிவிடும். பிராணிகள் உண்டதும் தர்மமாகிவிடும்" அறிவிப்பாளர்: ஜாபிர் (ரலி) (முஸ்லிம்)**

**● "ஒருவர் மரம் நாட்டினால் அம்மரத்தின் மூலம் எத்தனை பழங்கள் உற்பத்தியாகுமோ அவற்றின் அளவுக்கு மரத்தை நட்டவருக்கு இறைவனிடம் நன்மை கிடைக்கும்" அறிவிப்பாளர்: அபூ அய்யூப் (ரலி) (முஸ்னத் அஹ்மத்)**

**● "முஸ்லிம் ஒருவர் ஒரு மரத்தை நட்டு அல்லது விதைவிதைத்து விவசாயம் செய்து, அதிலிருந்து (அதன் விளைச்சலை அல்லது காய்கனிகளை) ஒரு பறவையோ, ஒரு மனிதனோ அல்லது ஒரு பிராணியோ உண்டால் அதன் காரணத்தால் ஒரு தர்மம் செய்ததற்கான பிரதிபலன் அவருக்குக் கிடைக்கும்" அனஸ் இப்னு மாலிக் (ரலி) (நூல்: புஹாரி)**

ஒரு மனிதன் இறந்து போனதும் அவனது நல்ல மற்றும் கெட்ட செயல்களும் அதன் மூலமான நன்மை மற்றும் பாவங்களும் நின்று போய்விடுகின்றன. ஆனால் அந்த மனிதன் உயிரோடு இருக்கும் போது வெட்டிய கிணறு , ஏற்படுத்திய கல்வி நிறுவனம், நட்டு வைத்த மரங்கள் ஆகியவை அவை மக்களுக்குப் பயன்படும் கால காலமெல்லாம் அவன் உலகைவிட்டு மறைந்தாலும் அவனுக்கு நன்மையை சேர்த்துக் கொண்டே இருக்கும் என்று கூறும் இஸ்லாம் அதை 'சதக்கத்துல் ஜாரியா' என்று வகைப்படுத்துகிறது.

**நன்றி: அதிரை நிருபர்**

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

**சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்: 9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி: 9842627171 கோவை: 9600800050 திருப்பூர்: 9150068919 குன்னூர்: 9843622246 ஊட்டி: 9843927014 ஈரோடு: 7373947869, 9942958888 உடுமலை: 9865051917 பழனி : 9894278528 பொள்ளாச்சி: 9843657426 சேலம்: 9994091364 திருச்சி: 9865446344, 9442709087 மதுரை: 9789341714 கும்பகோணம்: 9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 தென்காசி :9443695979 வேலூர்: 9944656942 திருவண்ணாமலை: 9994564650, 9944905212 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்: 9043758656 கே.ஜி.எ.ஃ.ப்: 9845217262**

# இறைவன் கூறும் நல்லமரமும் கெட்டமரமும்


ஒரு ஆரோக்கியமான மற்றும் அமைதியான சமூக அமைப்பு உருவாக இவை அனைத்தும் தேவை.. தனிநபர் நல்லொழுக்கம், மனித உரிமைகள் பேணப்படுதல், இனவெறி நிறவெறி மொழிவெறி ஒழிப்பு, மனித சமத்துவம் சகோதரத்துவம் பேணப்படுதல், பெண்ணுரிமைகள் பேணப்படுதல், பெண்சிசுக்கொலை ஒழிப்பு, வரதட்சணை ஒழிப்பு, பாலியல் கொடுமைகளில் இருந்து பாதுகாப்பு, விபச்சார ஒழிப்பு, குடும்ப அமைப்பின் பாதுகாப்பு, குழந்தை வளர்ப்பில் ஒழுக்கம், பெற்றோர் மற்றும் முதியோர் உரிமைகள் பேணப்படுதல், மது- போதை தொல்லைகளில் இருந்து பாதுகாப்பு , வட்டி ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, வழிபாட்டு உரிமைகள் பேணப்படுதல், இடைத்தரகர் ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, ஆன்மீகத்தின் பெயரால் சுரண்டல் மற்று ஆதிக்கம் ஒழிப்பு.

மனித மனங்களை சீர்திருத்தி அவர்களைக் கொண்டே மேற்கண்ட சமூக சீர்த்திருத்தங்களைப் பேணும் சமூகமாக மாற்றி அமைக்கும் புரட்சியை உலகெங்கும் இஸ்லாம் நிகழ்த்திக் கொண்டு வருகிறது. எந்த ஒரு அரசு நிர்பந்தமோ அடக்குமுறைப் பிரயோகமோ இன்றி மக்கள் தானாக நடக்கும் புரட்சி இது என்பதை நாம் கவனிக்கவேண்டும். இதற்கு அஸ்திவாரமாக விளங்குவது லா இலாஹா இல்லல்லாஹ் என்ற இஸ்லாத்தின் மூலமந்திரம் ஆகும். இதன் பொருள் ‘வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த இறைவன் அல்லாஹ்வை தவிர வேறு யாரும் இல்லை’ என்பதாகும். இதையே திருக்குர்ஆன் ‘கலிமா தய்யிபா’ (நல்வாக்கியம்) என்கிறது. (அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்பது பொருள்)

## நல்வாக்கியத்திற்கு உதாரணம் நல்லமரம்

இதன் சிறப்பைப் பற்றி இறைவன் தன் திருமறையில் இவ்வாறு கூறுகிறான்:

● **(கலிமா தய்யிபா எனும்) நல்வாக்கியத்திற்கு அல்லாஹ் எவ்வாறு உதாரணம் கூறுகிறான் என்பதை (நபியே!) நீர் கவனிக்கவில்லையா? அது மணம் மிக்க ஒரு நன்மரத்தைப் போன்றது அதனுடைய வேர்கள் (பூமியில் ஆழமாகப்) பதிந்த தாகவும் அதன் கிளைகள் வானளாவியும் இருக்கும். அது தன்னுடைய இறைவனின் அனுமதியைக் கொண்டு ஒவ்வொரு காலத்திலும் தன்னுடைய கனியைக் கொடுத்துக் கொண்டே**



**இருக்கிறது. மக்கள் நல்லுணர்வு பெரும் பொருட்டு அல்லாஹ் (இத்தகைய) உதாரணங்களைக் கூறுகிறான் (திருக்குர்ஆன் 14:24.-25)**

அதாவது இந்த மேற்கண்ட உறுதிமொழியை அடிப்படையாகக்கொண்ட உண்மையான இறைக்கோட்பாடும், முறையான மறுமை நம்பிக்கையும் மக்கள் உள்ளத்தில் விதைக்கப் படுமானால் அது சமூகத்திற்கு அள்ளி வரும் நன்மைகள் ஏராளம் ஏராளம்! இந்தச் சொல் உறுதியாக இவ்வுலக மக்களால் பின்பற்றப் பட்டால்- அதாவது இந்த உறுதிமொழியை மக்கள் மொழிந்து அதன்படி நடப்பார்களேயானால் அங்கு மேற்கூறப்பட்ட ஆக்கபூர்வமான சமூகப் புரட்சிகள் ஏற்படும்.

அது மட்டுமல்லாமல் இதன் அடிப்படையில் இவ்வுலக வாழ்வைக் கழித்தவர்களுக்கு பரிசாக மறுமையில் சொர்க்கம் என்ற நிரந்தர இன்பங்கள் நிறைந்த வாழ்விடமும் கிடைக்கிறது.

## கெட்ட வாக்கியத்தின் உதாரணம் கெட்டமரம்!

‘கடவுள் இல்லை’, ‘கடவுளைக் கற்பித்தவன் காட்டுமிராண்டி’ என்ற நாத்திக வாக்கியங்களும் சரி, படைத்தவனை விட்டுவிட்டு அவன் அல்லாதவற்றை வணங்கச் சொல்லும் ஆத்திக வாக்கியங்களும் சரி ஊகங்களை அடிப்படையாகக்கொண்டு உருவானவை. அவை மேற்கண்ட நல்வாக்கியத்திற்கு நேர் எதிரானவை. அனைத்தையும் அறிந்தவர்களைப் போலப் பிதற்றும் சில அற்ப மனிதர்களின் கற்பனையில் உருவானவை அவை. அவர்கள் வகுத்த இசங்களையும் கொள்கைகளையும் பின்பற்றுவோரால் ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடவோ மக்களிடையே பயனுள்ள சீர்திருத்தங்கள் மேற்கொள்ளவோ முடிவதில்லை. படைத்த இறைவனுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற பொறுப்புணர்வு அங்கு ஏற்படுவதில்லை. அதனால் தனிநபர் ஒழுக்கம் சாத்தியப்படுவதில்லை. ஒரு உறுதியான நிலையான கொள்கை இல்லாமையால் அவர்களால் இனம், மொழி, இடம், நிறம் போன்றவற்றால் இயல்பாகவே பிரிந்து நிற்கும் மக்களிடையே பிணைப்பை ஏற்படுத்தவோ முடிவதில்லை.



இறைவன் தன் தூதர்கள் மூலமாகவும் வேதங்கள் மூலமாகவும் மனித குல நன்மைக்காக போதிக்கும் உண்மைகளை மறுத்து இவர்களாகவே உண்டாக்கிக் கொண்ட இசங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் பூமியில் நிலைத்து நிற்கும் தன்மை கிடையாது. அவை தற்காலிகமாக வெற்றி பெறுவதைப் போல ஒரு மாயையை உண்டாக்கினாலும் காலப்போக்கில் அழிந்து விடுவதையே நாம் காணமுடிகிறது. உறுதியற்ற பட்டுப்போன மரத்தைப் போன்றது

அவர்களின் இசங்கள்.

● **(சத்தியத்தை மறுபோரின்) கெட்ட வாக்கியத்திற்கு உதாரணம் கெட்ட மரமாகும் பூமியின் மேல் பாகத்திலிருந்தும் (அதன் வேர்) பிடுங்கப்பட்டிருக்கும் அதற்கு நிலைத்து நிற்கும் தன்மையுமில்லை. (திருக்குர்ஆன் 14:26)**

நல்வாக்கியத்தைப் பின்பற்றுவோர் இம்மையில் அமைதி பெறுகிறார்கள். மறுமையில் சொர்க்கத்தைப் பரிசாகப் பெறுகிறார்கள். கெட்ட வாக்கியத்தைப் பின்பற்றுவோர் தங்கள் இசங்களை நம்பி இறைமறுப்பைக் கைக்கொள்வதால் அவர்களுடைய மறுமை வாழ்க்கை மிகவும் பரிதாபத்துக்குரியதாக ஆகிவிடுகிறது.

● **எவர்கள் இறைநம்பிக்கை கொள்கிறார்களோ அவர்களை இவ்வுலக வாழ்விலும் மறுமையிலும் உறுதியான சொல்லைக் கொண்டு அல்லாஹ் உறுதி படுத்துகின்றான் - இன்னும், அநியாயக்காரர்களை அல்லாஹ் வழி தவறச் செய்து விடுகிறான் மேலும் அல்லாஹ் தான் எதை நாடுகின்றானோ அதைச் செய்கின்றான். (திருக்குர்ஆன் 14:27)**

# உணவு என்ற அருட்கொடைக்கு நன்றி மறக்கலாமா?

● **“நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப் படுத்தினோம். இன்னும் கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப் படுத்தினோம்‘‘**

**( திருக்குர்ஆன் 17:70 )**

நாம் அன்றாடம் உண்ணும் உணவு என்பது எவ்வளவு பெரிய அருட்கொடை என்பதை பலநாள் பட்டினி கிடப்பவர்கள் நன்றாக அறிவார்கள். இன்று கேரளாவில் மழை தந்த பெரு வெள்ளத்தின் காரணமாக வீடுகளெல்லாம் தீவுகளாக மாறிய நிலையில் வீட்டின் கூரைமேல் வசிக்க வேண்டிய நிர்பந்தங்களுக்கு ஆளானவர்கள் அறிவார்கள். அன்றாடம் நம் ஃப்ரிட்ஜ்களிலும் உணவு மேசைகள் மீதும் உணவுப்பொருட்கள் அளவில்லாமல் கொட்டிக்கிடக்கும் வேளையில் அவற்றின் அருமையை நாம் உணருவதில்லை.

மட்டுமல்ல, அதில் அடங்கியுள்ள நம் இறைவனின் வல்லமையை எடுத்துச்சொல்லும் அற்புதங்களைப் பற்றி நாம் சிந்தித்தோமா? மண்ணிலிருந்து உருவாகி மீண்டும் மண்ணுக்கே சென்றடையும் வரை இந்த உணவு பயணிக்கும் பாதை நிறைய எவ்வளவு அற்புதங்கள்?

● விதை, முளை, செடி,கொடி, மரம், பூ, காய், பழம், தானியம்.........என்று ஒருபுறம்!

● ருசி, பசி,தாகம், வாய், நாக்கு, பற்கள், உணவுக்குழாய், வயிறு, சிறுகுடல்,பெருங்குடல், சுரப்பிகள், மலக்குடல், குதம், சிறுநீர், மலம்..... என

நம் உடலோடு தொடர்புடையவை ஒருபுறம்!

● அந்த உணவிலிருந்து பெறப்படும் சக்தி, ஆற்றல்,தெம்பு, ஊக்கம், வீரம், வேகம், உழைப்பு......... என உலகையே இயக்கும் விந்தை ஒருபுறம்!

இதில் எதைத்தான் நாம் மறுக்க முடியும்? ஒவ்வொரு கவளம் உணவு நாம் உண்ணும் போதும்,

• ”இதைத் தந்த என் இறைவனுக்கு நான் நன்றி செலுத்தி விட்டேனா?

• நான் இன்று வணங்குவது அவனையா?

• அல்லது இதில் எந்தப் பங்களிப்பும் செய்யாத மற்றும் எதையுமே உணராத படைப்பினங்களையா? உருவங்களையா? சமாதிகளையா?

• முன்னோர்கள் அதைச் செய்து வந்தார்கள் என்று நம் செயலுக்கு நியாயம் கற்பிப்பது முறைதானா?”

என்று நம்மை நாமே கேட்க கடமைப்பட்டு உள்ளோம்.

நம்மைப்படைத்த இறைவன் தன் இறுதி மறையில் நினைவூட்டுவதைப் பாருங்கள்:

**● “எனவே, மனிதன் தன் உணவின் பக்கமே (அது எவ்வாறு பெறப்படுகிறது) என்பதை நோட்டமிட்டுப் பார்க்கட்டும்.**

**• நிச்சயமாக நாமே மழையை நன்கு பொழியச் செய்கிறோம்.**

**• பின், பூமியைப் பிளப்பதாகப் பிளந்து-**

**• பின் அதிலிருந்து வித்தை முளைப்பிக்கிறோம்.**

**• திராட்சைகளையும், புற்பூண்டுகளையும் -ஒலிவ மரத்தையும், பேரீச்சையையும் -**

**• அடர்ந்த தோட்டங்களையும்.**

**• பழங்களையும், தீவனங்களையும்-**

**(இவையெல்லாம்) உங்களுக்கும், உங்கள் கால் நடைகளுக்கும் பயனளிப்பதற்காக,“ (திருக்குர்ஆன் 80: 24- 32)**

## உங்கள் தொழிற்சாலைகள் அவற்றை உருவாக்கவில்லை

இவ்வாறும் நம்மை சிந்திக்கச் சொல்கிறான்... இன்று நீங்கள் உண்ணும் உணவை உங்களுடைய தொழில் நுட்பமோ தொழிற்சாலைகளோ உண்டாக்கவில்லை. அந்த உணவு என்பது இறந்து கிடக்கும் பூமியில் இருந்து உருவாகி வெளியாவதை அன்றாடம் பார்க்கிறீர்கள்.. உண்கிறீர்கள்... இருந்தும் இவற்றை உங்களுக்காகவே உருவாக்கிய உங்கள் இரட்சகனைப் பற்றி நீங்கள் சிந்திப்பதும் இல்லை. அவனுக்கு நன்றி கூறுவதும் இல்லை...

**● “அன்றியும், இறந்து (தரிசாகக்) கிடக்கும் பூமி அவர்களுக்கு ஓர் அத்தாட்சியாகும் (மழையினால்) அதனை நாமே உயிர்ப்பித்து, அதிலிருந்து தானியத்தை வெளிப்படுத்துகின்றோம் அதிலிருந்துதான் இவர்கள் உண்கிறார்கள்.மேலும், அதில் நாம் பேரீத்த மரங்களினாலும், திராட்சை(க் கொடி)களினாலும் தோட்டங்களை உண்டாக்குகிறோம் இன்னும் அதில் நீரூற்றுக்களைப் பீறிட்டு ஓடச்செய்கின்றோம்.**

**அதன் பழவகைகளை அவர்கள் உண்பதற்காக ஆனால் அவர்களுடைய கைகள் இதை உண்டாக்கவில்லை - ஆகவே அவர்கள் நன்றி செலுத்தமாட்டார்களா?“ (திருக்குர்ஆன் 36 : 33-35)**

# மறுமையை நினைவூட்டும் இயற்க்கைக் காட்சிகள்

*இறைவனின் உள்ளமையையும் வல்லமையையும் அன்றாடம் உணர்த்திக்கொண்டிருக்கும் ஏராளமான அற்புத சான்றுகள் நம் உடலிலும் உண்டு. நம்மோடு பின்னிப்பிணைந்து நிற்கும் இயற்க்கையிலும் உண்டு. இவற்றை மனிதன் சற்று சிந்தித்துப் பார்த்தாலே அவனுக்குள் இறையச்சம் ஏற்படும். அதாவது மறுமையில் இறைவன் முன்னால் தன் செயல்களுக்கு பதில் சொல்லியாகவேண்டும் என்ற பொறுப்புணர்வு மேலிடும். ஆனால் பெரும்பாலோர் இவற்றைப் பொருட்படுத்தாமல் செல்கின்றனர் என்று இறைவன் கூறுகிறான்:*

**● வானங்களிலும், பூமியிலும் எத்தனையோ சான்றுகள் உள்ளன. இவர்கள் அவற்றைக் கடந்து சென்ற வண்ணம் இருக்கின்றார்கள். ஆயினும் அவற்றைக் குறித்து சற்றும் கவனம் செலுத்துவதில்லை. (திருக்குர்ஆன் 12:105)**

**● நிச்சயமாக வானங்களையும், பூமியையும் (இறைவன்) படைத்திருப்பதிலும் இரவும், பகலும் மாறி, மாறி வந்து கொண்டிருப்பதிலும் மனிதர்களுக்குப் பயன் தருவதைக் கொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும் வானத்திலிருந்து அல்லாஹ் தண்ணீரை இறக்கி அதன் மூலமாக பூமியை இறந்த பின் அதை உயிர்ப்பிப்பதிலும் அதன் மூலம் எல்லா விதமான பிராணிகளையும் பரவ விட்டிருப்பதிலும், காற்றுகளை மாறி, மாறி வீசச் செய்வதிலும் வானத்திற்கும், பூமிக்குமிடையே கட்டுப்பட்டிருக்கும் மேகங்களிலும் - சிந்தித்துணரும் மக்களுக்கு (இறைவனின் வல்லமையையும், கருணையையும் எடுத்துக் காட்டும்) சான்றுகள் உள்ளன. (திருக்குர்ஆன் 2:164)**

## மீண்டும் உயிர்பித்தல் பற்றிய சான்றுகள்

*மனிதன் மரணித்தபின் மீண்டும் விசாரணைக்காக உயிர்கொடுத்து எழுப்பப்பட இருக்கிறான் என்று சொல்லப்பட்டாலே சத்தியத்தை மறுப்பவர்கள் பரிகாசம் செய்கிறார்கள். அவர்களிடம் தங்களைச் சுற்றி நடக்கும் இயற்க்கை நிகழ்வுகளைப் பற்றி சிந்திக்கச் சொல்கிறான். வறண்டு கட்டாந்தரையாகக் கிடக்கும் பூமி எவ்வாறு உயிர் பெற்று தாவரங்களை முளைப்பிக்கிறது என்பதை சிந்தித்தாலே இறந்தவர்களை மீண்டும் படைப்பது கடினமல்ல என்பதை அறியலாம்.*

**● அவனே உயிரற்றதிலிருந்து உயிருள்ளதை வெளிப்படுத்துகிறான் உயிருள்ளதிலிருந்து உயிரற்றதை வெளிப்படுத்துகிறான் இந்தப் பூமியை அது இறந்தபின் உயிர்ப்பிக்கிறான் இவ்வாறே (மரித்தபின் மறுமையில்) நீங்களும் வெளிப்படுத்தப்படுவீர்கள். (திருக்குர்ஆன் 30:19)**

**● பூமியானது காய்ந்து வரண்டு கிடப்பதை நீர் பார்ப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் நின்றுள்ளதாகும் அதன் மீது நாம் மழையை பொழியச் செய்தால், அது (புற் பூண்டுகள் கிளம்பிப்) பசுமையாக வளர்கிறது் (இவ்வாறு மரித்த பூமியை) உயிர்ப்பித்தவனே, நிச்சயமாக இறந்தவர்களையும் திட்டமாக உயிர்ப்பிக்கிறவன் நிச்சயமாக அவன் எல்லாப் பொருட்கள் மீதும் பேராற்றல் உடையவன். (திருக்குர்ஆன் 41:39)**

### மின்னலிலும் மேகத்திலும் காற்றிலும் சான்றுகள்

● அச்சமும், ஆசையும் ஏற்படும்படி அவன் உங்களுக்கு மின்னலைக் காட்டுவதும் பிறகு வானத்திலிருந்து மழை பொழியச் செய்து, அதைக் கொண்டு பூமியை - அது (வரண்டு) இறந்த பின்னர் உயிர்ப்பிப்பதும் அவன் அத்தாட்சிகளினின்றும் உள்ளன நிச்சயமாக அதில் சிந்தித்துணரும் சமூகத்திற்கு அத்தாட்சிகள் இருக்கின்றன. (திருக்குர்ஆன் 30:24)


● மேலும் அல்லாஹ்தான் காற்றுகளை அனுப்புகிறான் அவை மேகங்களை(க் கிளப்பி) ஓட்டுகின்றன - பின்னர் அவற்றை (வரண்டு) இறந்துகிடக்கும் நிலத்தின் மீது செலுத்துகிறோம். (மழை பெய்யச் செய்து) அதைக் கொண்டு நிலத்தை அது (வரண்டு) இறந்து போனபின் உயிர்ப்பிக்கின்றோம். (இறந்து போனவர் மறுமையில்) உயிர்பெற்று எழுவதும் இவ்வாறே இருக்கிறது. (திருக்குர்ஆன் 35:9)

### ஆத்திகர்கள் சிந்தனைக்கு

*இறைநம்பிக்கை கொண்ட ஆத்திகர்களில் படைத்தவனை விட்டுவிட்டு படைப்பினங்களை கடவுளாக பாவித்து வணங்குவோரும் உண்டு. இவர்களும் இயற்கையில் நடக்கும் நிகழ்வுகளை சற்று கவனித்தால் படைத்தவன் மட்டுமே வணக்கத்திற்கு உரியவன் என்பதை அறிந்துகொள்ள முடியும்.*

● இன்னும், அவர்களிடம்: ”வானத்திலிருந்து நீரை இறக்கி, பிறகு அதனைக் கொண்டு இப்பூமியை - அது (காய்ந்து) மரித்தபின் உயிர்ப்பிப்பவன் யார்?” என்று நீர் கேட்பீராகில்: “அல்லாஹ்” என்றே இவர்கள் திட்டமாகக் கூறுவார்கள் (அதற்கு நீர்) “அல்ஹம்து லில்லாஹ் - புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது” என்று கூறுவீராக் எனினும் இவர்களில் பெரும்பாலோர் அறிந்துணர மாட்டார்கள். (திருக்குர்ஆன் 29:63)

## வாழ்வே மாயமா?





● (நபியே!) இவர்களுக்கு இம்மை வாழ்வின் உண்மை நிலையை இந்த உதாரணத்தைக் கொண்டு விளக்குவீராக: நாம் (இன்று) வானத்திலிருந்து மழை பொழியச் செய்கின்றோம். பிறகு, அதன் மூலம் பூமியில் செடிகொடிகள் நன்கு அடர்ந்து வளர்ந்தன. (நாளை) அதே கொடிகள் காற்றடித்துச் செல்லும் காய்ந்த பதராகிவிடுகின்றன. இறைவன் அனைத்தின் மீதும் பேராற்றல் கொண்டவனாக இருக்கின்றான். (திருக்குர்ஆன் 18:45)

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2018-2020
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308
Date of Publication: 25th of every month

To

**(PRINTED MATTER)**

..............................................................................

..............................................................................

..............................................................................

..............................................................................



## ஆளுவோருக்கும் ஆளத்துடிப்போருக்கும் இறை எச்சரிக்கை!

● 'நினைவில் கொள்க! ஆட்சித் தலைவர் மக்களின் பொறுப்பாளர் ஆவார். அவர் தம் குடிமக்கள் குறித்து விசாரிக்கப்படுவார்.' – நபிமொழி (நூல்: முஸ்லிம்)